# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 36/மா/2025**

**நாள்: 10.06.2025**

திரு.B.இரமேஷ்,
உள்ளகரம்,
சென்னை ....... முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம் 14,
சென்னை–91. ........ எதிர்மனுதாரர்

சென்னை–91, உள்ளகரம், ராஜேஸ்வரி நகர், பிரதான சாலை, பிளாட் எண் 32 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.B.இரமேஷ், என்பவரின் 20.12.2024 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறை மன்ற நடுவத்தில் 23.12.2024 அன்று பெறப்பட்டு 36/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை–91, உள்ளகரம், ராஜேஸ்வரி நகர், பிரதான சாலை, பிளாட் எண் 32 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.B.இரமேஷ், என்பவரின் 20.12.2024 நாளிட்ட தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

“என்னுடைய வீடு பெருநகர சென்னை மாநகராட்சி 14 மண்டல அலுவலகம் அருகாமையில் உள்ளது. நான் பெருநகர சென்னை மாநகராட்சி இணையதளம் மூலமாக சென்னை மாநகராட்சி மண்டலம் 14 சம்பந்தமாக இரண்டு புகார்கள் கடந்த 02.12.2024 மற்றும் 08.12.2024 தேதிகளில் பதிவு செய்திருந்தேன். அதன் புகார் எண்கள் 2024–251 JNM & 2024–260 IJD ஆகும். என் புகார்கள் மண்டலம் 14 வார்டு 186 சம்பந்தப்பட்டது. மழைக் காலங்களில் என் வீட்டின் அருகே உள்ள பாதாள சாக்கடை மூடியிலிருந்து மலத்துடன் கழிவு நீர் பெருமளவில் நாட்கணக்கில் வெளியேறி என் வீட்டின் முன்பாக தெருவில் தேங்குவதுடன் மழை நீர் வடிகால் கால்வாயிலும் கலந்து வருகிறது. இதனால் நான் மட்டுமல்லாது என் வீட்டின் அருகே குடியிருப்பவர்களும் நோய் தொற்றுக்கு ஆளாகின்றனர். மேலும், துர்நாற்றத்தை சுவாசிக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகின்றனர். என் வீட்டின் கழிவு நீர் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ள பாதாள சாக்கடை மூடியிலிருந்து மலத்துடன் கழிவு நீர் வெளியேறுவது

பற்றியும் இதனால் பொது சுகாதாரம் பாதிப்பது குறித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சி இணையதளம் மூலம் நான் கடந்த 02.12.2024 தேதியில் புகார் பதிவு செய்தேன். என்னுடைய புகாரின் அடிப்படையில் என் வீட்டின் முன்பாக இரண்டு நாட்கள் மட்டும் மருந்து தெளித்த பெருநகர சென்னை மாநகராட்சி 14 மண்டல சுகாதார துறையினர் என்னுடைய புகாரை முடித்து விட்டனர். மேலும், இது சம்மந்தமாக சென்னை மெட்ரோ வாட்டர் 186வது வார்டு உதவிப்பொறியாளரை நான் தொடர்பு கொள்ள வேண்டுமென தெரிவித்தனர். பெருநகர சென்னை மாநகராட்சி 14வது மண்டல சுகாதார துறையினரின் இந்த கண்துடைப்பு நடவடிக்கை சட்டத்திற்கு புறம்பானது மட்டுமல்லாது கடமை தவறிய செயலாகும். என்னுடைய தெருவில் பாதாள சாக்கடை மூடியிலிருந்து மலத்துடன் கழிவு நீர் மழைக்காலங்களில் வெளியேறும் போது தினமும் நோய் பரவாவண்ணம் மருந்து தெளிக்க வேண்டியது மேற்படி சுகாதாரத் துறையினரின் சட்டப்பூர்வமான கடமையாகும். சாதாரண பொது ஜனம் தன்னுடைய வீட்டு கழிவு நீரை பொதுச் சாலையில் வெளியேற்றும் போது மேற்படி சுகாதாரத் துறையினர் அவருக்கு நோட்டீஸ் கொடுத்து அபராதம் விதிக்கின்றனர். ஆனால் தெரு பாதாள சாக்கடை மூடியிலிருந்து கழிவு நீர் மலத்துடன் வெளியேறும் போது அதைப் பற்றி மேற்படி சுகாராத் துறையினர் கண்டு கொள்வதில்லை. சென்னை மெட்ரோ வாட்டர் அதிகாரிகளுக்கு வெறும் கடிதம் எழுவதுடன் தங்களது பணிமுடிந்து விட்டது என கருதுகின்றனர். ஆனால் என்னுடைய தெரு பாதாள சாக்கடை மூடியிலிருந்து மலத்துடன் கழிவு நீர் மழைக்காலங்களில் நாட்கணக்கில் வெளியேறி தெருவில் என் வீட்டின் முன்பாக தேங்கி நிற்பதுடன் மழை நீர் வடிகால் கால்வாயிலும் பெருமளவில் கலந்து பொது சுகாதார சீர்கேட்டை உண்டாக்கி நோய்களை பரப்புகிறது. இதிலிருந்து என்னையும் தெருவாசிகளையும் பாதுகாக்க வேண்டியது பெருநகர சென்னை மாநகராட்சி 14வது மண்டல சுகாதார அலுவலரின் சட்டப் பூர்வ கடமையாகும். எனவே, மாண்பமை உள்ளாட்சி முறைமன்ற நடுவர் அவர்கள் தயவு செய்து பொது நலன் கருதி மேற்படி நிகழ்வுகளை கருத்தில் கொண்டு மழைக்காலங்களில் நாட்கணக்கில் என்னுடைய வீட்டினருகேயுள்ள பாதாள சாக்கடை மூடியிலிருந்து மலத்துடன் கழிவு நீர் வெளியேறும் போது பொது சுகாதாரம் பாதிக்கா வண்ணம் தக்க நடவடிக்கை எடுக்க பெருநகர சென்னை மாநகராட்சி 14வது மண்டல சுகாதார அலுவலருக்கு தகுந்த உத்தரவுகள் பிறப்பிக்குமாறும் மேலும் நியாயமெனக் கருதும் இன்னபிற உத்தரவுகளை பிறப்பிக்குமாறும் தங்களை நான் பணிவன்புடன்வேண்டுகிறேன்.

2. மேற்கண்ட மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறை மன்ற நடுவர் 18.02.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 14ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

3. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 14ன் மண்டல அலுவலர் 04.03.2025 நாளிட்ட தனது அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

“மனுதாரர் பகுதியில் கோட்டம் 186 சுகாதார ஆய்வாளரால் 03.12.2024 அன்று ஆய்வு செய்யப்பட்டு அப்பகுதி முழுவதும் பொது சுகாதாரத்துறை பணியாளர்களால் அனைத்து வீடுகளிலும் கிருமி நாசினி தெளித்தல், காய்ச்சல் மற்றும் நோய் தொற்று பாதிப்புகள் கண்டறிதல் மற்றும் குடிநீரில் குளோரின் பரிசோதனை போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு தொற்றுநோய் பாதிப்புகள் ஏதும் இல்லை என உறுதி செய்யப்பட்டது. மேலும், நிரந்தர நடவடிக்கை எடுக்கும் பொருட்டு சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியம் கோட்டம் 186ன் உதவி பொறியாளர் அவர்களுக்கு பாதாள சாக்கடை மூடியிலிருந்து கழிவுநீர் சாலையில் வழிந்தோடுவது குறித்து தகவல் தெரிவிக்கப்பட்டு CMWSSB ன் கழிவுநீர்அகற்றும் வாரியம் மூலம் கழிவுநீர் வழிந்தோடுவது சரிசெய்யப்பட்டது. மேற்படி மனுதாரரிடம் இப்புகார் பெருநகர சென்னை மாநகராட்சியை சார்ந்தது அல்ல என்றும், இப்புகார் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியத்தை

(CMWSSB) சார்ந்தது என்றும், மேல் நடவடிக்கைக்கு உதவி பொறியாளர் 186 (CMWSSB) கைப்பேசி எண்.8144930186 என்ற எண்ணை தொடர்பு கொள்ளவும் தகவல் தெரிவித்து சம்பந்தப்பட்ட பகுதி பொறியாளர் (CMWSSB) அவர்களுக்கு 04.12.2024 அன்று கடிதம் அனுப்பப்பட்டு PGR புகார் தீர்வு செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேலும், மனுதாரர் இந்த புகாரினை பெருநகர சென்னை மாநகராட்சியில் தொடர்ந்து பதிவு செய்ததால் கடந்த 12.12.2024 அன்று புகாருக்குட்பட்ட பகுதியில் ஆய்வு மேற்கொண்டு உதவிப்பொறியாளர் 186 (CMWSSB) அவர்களுக்கு நிரந்தர நடவடிக்கை எடுக்க தகவல் தெரிவிக்கப்பட்டு, CMWSSB-ன்கழிவுநீர் அகற்றும் வாகனம் வரவழைக்கப்பட்டு அவ்வாகனத்தின் மூலம் பாதாள சாக்கடையின் மூடி வழியாக கழிவுநீர் அப்புறப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டது. மேலும், அப்பகுதி முழுவதும் தொற்று நோய்பரவுவதை தவிர்க்க பொது சுகாதாரத்துறையின் மூலம் கிருமி நாசினி தெளித்தல், மழைநீர் கால்வாயில் கொசுமருந்து தெளித்தல் உள்ளிட்ட நோய்தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

திரு. B. இரமேஷ், அவர்களின் புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–14, கோட்டம் 186, ராஜேஸ்வரி நகர் பிரதான சாலை பகுதியில் பொது சுகாதாரத்துறையின் மலேரியா பணியாளர்கள் (DBC) மூலம் வாரந்தோறும் வீடுவீடாக கொசுப்புழு ஆய்வு, கொசுப்புழு வளர்வதை தடுக்க, அபேட் மருந்து ஊற்றுதல், காய்ச்சல் பாதிப்பு விவரங்கள் சேகரித்தல் கொசுப்புழு வளர்வதற்கு ஏதுவான தேவையற்ற பொருட்களை அகற்றும் பணிகள் (Source reduction) மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், அப்பகுதிகளில் உள்ள மழைநீர் கால்வாய்களில் கொசுப்புழு வளர்வதை தடுக்க கொசு மருந்து தெளிக்கும் பணி, வளர்ந்த கொசுவை கட்டுப்படுத்த மழைநீர் கால்வாய் மற்றும் வீடுவீடாக புகைப்பரப்பும் பணி மற்றும் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் வாகனம் மூலம் புகைப்பரப்பும் பணி போன்ற நோய் தடுப்பு பணிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**மேற்படி மனுதாரரின் புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள பாதாள சாக்கடை கழிவுநீர் அகற்றுதல்,பராமரிப்பு மற்றும் இயக்குதல் பொதுமக்களின் புகார் மீது நடவடிக்கை மேற்கொள்ளுதல் போன்ற பணிகளை சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் (CMWSSB)மேற்கொண்டு வருகிறது.**

எனவே, திரு.இரமேஷ் குறிப்பிட்ட புகார் முற்றிலும் CMWSSB யை சார்ந்தது எனினும், மேற்படி புகார் PGR மூலம் பெறப்பட்டதால், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14 அலுவலர்களால் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது'' என்று தெரிவித்துள்ளார்.

4. மனுதாரரின் மனு மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் மண்டல அலுவலரின் அறிக்கை ஆகியவை கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு பின்வரும் விவரங்கள் கண்டறியப்பட்டன.

''மனுதாரர் தனது வீட்டின் கழிவுநீர் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ள பாதாள சாக்கடை மூடியிலிருந்து மலத்துடன் கழிவுநீர் வெளியேறுவது குறித்து புகார் தெரிவித்துள்ளார் என்பதும், மனுதாரரின் புகார் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றும் வாரியத்தை (CMWSSB) சார்ந்தது என்பதும், எனினும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் அலுவலர்களால் மனுதாரரின் புகாரின் மீது சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் (மற்றும்) கழிவு நீர் அகற்று வாரியத்திற்கு (CMWSSB) உரிய நடவடிக்கை எடுக்க தகவல் தெரிவிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் சுகாதார பிரிவின் மூலம் நோய் தடுப்பு பணிகள்

மேற்கொள்ளப்பட்டது என்பதும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் மண்டல அலுவலரின் அறிக்கை மூலம் அறிய முடிகிறது.

5. இந்நேர்வில், மனுதாரரின் புகார், சென்னை பெருநகர குடிநீர் வடிகால் மற்றும் கழிவு நீர் அகற்றும் வாரியத்தை சார்ந்தது என்பதால், மனுதாரர் அவர்கள் தனது புகார் குறித்து பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றும் வாரியத்தை தொடர்பு கொண்டு உரிய நிவாரணம் பெறுமாறு அறிவுறுத்திட இம்முறை மன்றம் ஆணையிடுகிறது. மேலும், மனுதாரரின் பகுதியில் தொற்று நோய் பரவுவதை தவிர்க்க கிருமி நாசினி தெளித்தல், மழை நீர் கால்வாய், கொசு மருந்து தெளித்தல், மற்றும் நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டது என்று பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் மண்டல அலுவலர் தன்னுடைய அறிக்கையில் தெரிவித்தவாறு, அப்பகுதியில் நோய் பரவாமல் தடுக்கும் வண்ணம் சுகாதார பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் மண்டல அலுவலருக்கு அறிவுரை வழங்குமாறு, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறை மன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 10–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. B.இரமேஷ்,
பிளாட் எண் 32, ராஜேஸ்வரி நகர்
பிரதான சாலை, உள்ளகரம்
சென்னை–600091.

2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

3) மண்டல அலுவலர்,
மண்டலம் 14,
பெருநகர சென்னை மாநகராட்சி,
6/64 புழுதிவாக்கம் பிரதான சாலை,
சென்னை–600 091.

4) மேலாண்மை இயக்குநர்,
பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவு நீர் அகற்றும் வாரியம்,
1, பம்பிங் ஸ்டேசன் ரோடு,
சிந்தாதாரிப்பேட்டை,
சென்னை–600 002.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவர்
சென்னை–600 032